Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 640/2024**

**Deposition of PW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலாஜி | ஜாதி | : | |
| த/பெ | : | பொன்னுச்சாமி | தொழில் | : | அண்ணா யுனிவர்சிட்டியில் Security supervisor |
| கிராமம் | : | பண்ணைப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 46/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2026.

(புகார்தாரர் ஆஜர்)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரியை உங்களுக்கு எத்தனை வருடமாக தெரியும் என்றால் 5 வருடமாக தெரியும். எதிரி புதுப்பட்டி காலனியில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் எலக்ட்ரிக்கல் கடை வைத்துள்ளார். அது குறித்த ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த பிப்ரவரி 2023 முதல் மே மாதம் 2024 வரை இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள காசோலை தொகை வரவு செலவு ஏற்பட்டதாக கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். 07.02.2023 ல் ரூ.6,45,000/- எதிரி பெற்றதாக சொல்வதற்கு எந்த காசோலையையும் அன்றைதேதியில் கொடுக்கவில்லை எனறால் சரிதான். 10.08.2023 அன்று ரூ.1,00,000/- எதிரி பெற்றதாக சொல்லும் தேதியில் எந்த காசோலையையும் எதிரி அன்றைதேதியில் கொடுக்கவில்லை எனறால் சரிதான்.

07.09.2023 அன்று ரூ.55,000/- எதிரி பெற்றதாக சொல்லும் தேதியில் எந்த காசோலையையும் எதிரி அன்றைதேதியில் கொடுக்கவில்லை எனறால் சரிதான்.மேற்சொன்ன கடன் தொகைகளை வங்கியின் மூலமாக எதிரிக்கு கொடுத்தீர்களா அல்லது பணமாக கொடுத்தீர்களா என்றால் என்னுடைய வங்கி

கணக்கிலிருந்து பணத்தை எடுத்து பணமாக எதிரிக்கு கொடுத்தேன். மேற்படி கடன் தொகையை 3 தவணைகளாக எதிரிக்கு வழங்கினீர்கள் என்றால் சரிதான். மேற்படி பணத்தை எதிரிக்கு கொடுக்கும் போது சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரியல்ல சாட்சி உள்ளார்கள். எனது நண்பர்கள் சாட்சிகளாக உள்ளார்கள்.

எதிரியின் மனைவியோ, உறவினர்களோ கடன் கொடுக்கும் போது இல்லை என்றால் சரிதான், என் நண்பர்கள் இருந்தார்கள். 07.02.2023 தேதியில் கொடுத்தாக சொல்லும் கடனுக்கு ஒரு வருடம் கழித்து தான் இவ்வழக்கு காசோலையை எதிரி உங்களிடம் கொடுத்ததாக கூறுகிறீர்கள் என்றால் சரிதான். யார் முன்னிலையில் எதிரி உங்களிடம் காசோலை கொடுத்தார் என்ற விபரத்தை உங்களுடைய புகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நீங்கள் வருமான வரி செலுத்துபவரா என்றால் இல்லை. நீங்கள் பைனான்ஸ் தொழில் செய்கிறீர்களா என்றால் இல்லை. நீங்கள் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் கடன் தொகையை காட்டும் வகையில் உங்களுடைய வங்கி கணக்கு விபரத்தையோ வருவாய் ஆதாரங்களையோ தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை, ஆனால் உள்ளது. காசோலைகள் Drawer signature incomplete/ illegible/defers என்று தான் திருப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருப்பப்பட்ட காசோலைகள் இரண்டும் வெவ்வேறு மையினால் தேதி மற்ற காலங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்றால் எதிரி காசோலைகளில் கையொப்பம் மட்டுமே செய்து என்னிடம் கொடுத்தார். காசோலையில் உள்ள தேதியை நான் தான் பூர்த்தி செய்தேன். உங்களிடம் காட்டப்படும் காசோலையில் உள்ள தேதி மற்றும் கையெழுத்தை தவிர உள்ள விபரங்களை யார் பூர்த்தி செய்தார்கள் என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும், வங்கியில் பூர்த்தி செய்தார்கள்.

10.07.2024 அன்று உங்களுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியின் கையொப்பம் மாறுபட்டுள்ளதாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். எதிரிக்கு கடன் கொடுக்க சொல்லி யாரும் உங்களுக்கு சிபாரிசு செய்தார்களா என்றால் மனோஜ்குமார்,

ரமேஷ் ஆகியோர் கூறினார்கள். மேற்படி இரண்டு நபர்களை தவிர எதிரிக்கு கடன் கொடுக்க யாரும் சிபாரிசு செய்தார்காளா என்றால் இல்லை.

உங்கள் அசல் வழக்கிலும், முதல் விசாரணையில் கடன் கொடுக்க சிபாரிசு செய்த நபர்கள் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கடந்த பிப்ரவரி 2023 முதல் மே 2024 வரை நீங்கள் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல எதிரி எந்த கடனும் உங்களிடமிருந்து பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் காசோலையை வேறு பைனான்ஸ் நிறுவனத்திடமிருந்து பெற்று எதிரியின் கையொப்பத்தை பூர்த்தி செய்து, வசூலுக்கு தாக்கல் செய்து அதன்பின்னிட்டு இந்த காசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் இவ்வழக்கில் கூறியுள்ளபடி எதிரி உங்களிடமிருந்து எந்த கடனுடம் பெறவில்லை என்றும், எதிரி உங்களுக்கு எந்த பணமும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor